# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2003, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

# 2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் சட்டம்

[2003 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

எ. வ.—ஓ. 7/2003
4747

**இலங்கைத் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் பற்றிய தேசியக் குழுவைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்: தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் பற்றிய தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைப்பதற்கும் மற்றும் செயல்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும்: தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியலுக்கான செயலணியொன்றை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்: அரசாங்க, தனியார்துறைகளில் தேசியக் கொள்கையின் செயற்பாடு பொறுப்பிக்கப்பட்ட இலங்கைத் தகவல் அத்துடன் தொடர்புத்தொழினுட்பவியல் முகவர் நிலையத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்: அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

குறுக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும் சட்டத்தின் காலப்பகுதியும்.

1. (1) இச்சட்டம் 2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் ஒதுக்கப்பட்டுள்ள அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய சட்டம் எத்தேதியன்று நடைமுறைக்கு வருகின்றதோ அத்தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

## பாகம் I

## தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் மீதான தேசியக் கொள்கையும் செயல்திட்டமும்

தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் மீதான தேசியக் கொள்கை, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

2. அமைச்சரவையானது, காலத்துக்குக்காலம், கைத்தொழிலின் நலன்களைக் கருத்திற்கொண்டு, தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் தொடர்பிலான தேசியக் கொள்கைக் கட்டுக்கோப்பை அங்கீகரித்தல் வேண்டும்.

தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் பற்றிய செயலணியை நியமித்தல்.

**3.** (1) இரண்டாம் உட்பிரிவின்கீழ் வகுத்தமைக்கப்பட்ட தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியற் கொள்கையை இலங்கையினுள் தகுந்த முறையில் செயற்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கென, அமைச்சரவையானது, (இதனகத்துப்பின்னர் "செயலணி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் மீதான செயலணியை நியமித்தல் வேண்டும். இது இருபதுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவர் செயலணியின் தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) செயலணியின் உறுப்பினர்கள், தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல், தொலைத்தொடர்புகள், சட்டம், வியாபாரம் மற்றும் நிதி என்னும் துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களாகவுள்ள ஆட்களிடையேயிருந்து தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.

செயலணியின் பணிகள்.

**4.** செயலணியின் பணிகள் பின்வருமாறாதல் வேண்டும் :–

(அ) தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் பற்றிய தேசியக் கொள்கைக்கிணங்க செயல் திட்டமொன்றைத் தயாரித்தல் ;

(ஆ) அரசாங்கத்துறையிலும் தனியார்துறையிலும் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல்மீதான தேசியக் கொள்கையினதும் மற்றும் செயல்திறத்தினதும் செயற்பாட்டை ஒருங்கிணைத்தலும் அதன் செயற்பாட்டிற்கு வசதிசெய்தலும் ;

(இ) தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் மீதான தேசியக் கொள்கையினதும் மற்றும் செயல்திட்டத்தினதும் செயற்பாட்டை மேற்பார்வை செய்தலும் அத்துடன் அவசியமானவிடத்து, செயற்படுத்துகின்ற முகவர் நிலையங்களுக்குக் காலத்துக்குக்காலம் பணிப்புக்களை வழங்குதலும் ;

(ஈ) தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் இலங்கையினுள் பொதுமக்களினால் விரும்பத் தக்கதாக ஆக்கப்படக்கூடிய முறையை அடையாளங் காண்கின்ற திட்டங்களைத் தயாரித்தல் ; அத்துடன்

(உ) மனிதமூலவளங்கள் அபிவிருத்தி உற்பத்திகள், சேவைகள், சந்தைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல் கள் என்பவற்றில், தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல்துறைக்கு அவை ஏற்புடையன வாகுவதில், அவற்றுக்கான சர்வதேசப் பிரசித்தி பெற்ற தரங்களை அடையாளங்காணுதலும், அபிவிருத்தி செய்தலும் மற்றும் அவற்றை ஏற்றுக் கொள்வதனைச் செய்வித்தலும் ; அத்துடன்

(ஊ) அவசியமானவிடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக் குப் பயனளிக்கவென ஒழுங்குவிதிகளை ஆக்க விதப்புரை செய்வித்தலும்.

## பாகம் II

## தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் மீதான தேசியக்குழு

5. (1) (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடுசெய் யப்படும்) தகவல் தொடர்ந்த தொழினுட்பவியல் பற்றிய தேசியக் குழுவொன்று இருத்தல் வேண்டும். தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் மீதான தேசியக்குழு.

(2) குழுவானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அமைச்சர் ; அவர் குழுவின் எல்லாக் கூட்டங் களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும் ;

(ஆ) தொலைத்தொடர்புகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் ;

(இ) கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் ;

(ஈ) உயர்கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக வுள்ள அமைச்சர் ;

(உ) பொதுநிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சர் ;

(ஊ) தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் கைத்தொழிலின் தேவைகளைக் கவனத்துட்கொண்டு அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டவாறான, அக்கறை வைத்திருப்போரின் ஒவ்வொரு வகுதி தொடர்பிலுமான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்கள் அத்தகைய உறுப்பினர்கள் முறைப் படியான அமைச்சர்களினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) கொள்கைகள் பற்றிக் கலந்துரையாடுதலும், தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியலுக்கும் அதன் செயற்பாட்டைக் காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்வதற்குமான நிகழ்ச்சித் திட்டங்களையும் திட்டங்களையும் தயாரித்தலும் என்னும் பணி, குழுவுக்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(4) குழுவானது ஒவ்வொரு நான்கு மாதங்களிலும் ஆகக் குறைந்தது ஒருதடவையாயாவது கூடுதல் வேண்டும்.

(5) பேரவையின் கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையானது விதித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.

(6) தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல்மீதான தேசியக் கொள்கையையும் செயல்திட்டத்தையும் செயற்படுத்து வதற்கு அவசியமானவாறான வழிகாட்டுநெறிகளையும் பணிப் புக்களையும் குழுவானது செயலணிக்கு வழங்குதல் வேண்டும்.

## பாகம் III

## பொது

### இலங்கைத் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் முகவர் நிலையத்தைத் தாபித்தல்

இலங்கைத் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் முகவர் நிலையமானது, செயலணிக்குங் குழுவுக்குந் துணைபுரிதல்.

6. (1) (ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரெண்டாம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட) இலங்கைத் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் முகவர் நிலையமானது, செயலணிக்கும் குழுவுக்கும் துணைபுரிவதற்கான நிறைவேற்று முகவர் நிலைய மாக இருத்தல் வேண்டும்.

(2) அமைப்புப் புறவிதியிலும் அமைப்பு அகவிதிகளிலும் குறிப்பிட்டுள்ளவாறு முகவர் நிலையத்தின் தத்துவங்களுக்கும் பணிகளுக்கும் மேலதிகமாக, முகவர் நிலையமானது பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் மீதான தேசியக் கொள்கையை வகுத்தமைப்பதற்கு அவசியமான எல்லாத் தகவலையும் வழங்குதலும் மற்றும் அமைச்சரவைக்கும் குழுவுக்கும் துணை புரிதலும் ;

(ஆ) தேசியக் கொள்கையிலும் மற்றும் செயல்திட்டத்திலும் உள்ளடக்கப்படவேண்டிய முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல் ;

(இ) தேசியக் கொள்கையினதும் செயல்திட்டத்தினதும் செயற்பாட்டுக்கு வசதிசெய்வதற்கு அவசியமான வாறான அத்தகைய எல்லா நடபடிகளையும் எடுத்தலும், அவற்றைக் காலத்துக்குக்காலம் கண்காணித்தலும் மீளாய்வுசெய்தலும் ;

(ஈ) தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் மீதான தேசியக் கொள்கைக்கும் செயல்திட்டத்துக்கும் ஏற்ப, அரசாங்க மற்றும் தனியார்துறைகளில் செயற்படுத்தப்படுவதற்குத் தேவைப்படுகின்ற உத்திகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் தயாரித்தல் ;

(உ) தகவல் தொடர்புத் தொழினுட்பவியல்மீதான தேசியக் கொள்கையை வகுத்தமைப்பதற்கு அவசியமான எல்லாத் தகவலையும் வழங்குதல் ;

(ஊ) செயல்திட்டத்தைத் தயாரிப்பதில் கவனத்துட்கொள்ளப்படுவதற்குத் தேவைப்படுகின்ற கருமங்களைச் செயலணிக்கு விதந்துரைத்தல் ;

(எ) தேசியக்கொள்கையிலும் செயல்திட்டத்திலும் உள்ளடக்கப்படுவதற்குத் தேவைப்படுகின்ற கருமங்கள் தொடர்பில் முன்மொழிவுகளைச் சமாப்பித்தல் ; அத்துடன்

(ஏ) தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியலின் மீதான தேசியக்கொள்கையுடனும் செயல்திட்டத்துடனும் இணங்க அரசாங்கத்துறையிலும் தனியார் துறையிலும் செயற்படுத்துவதற்கான உபாயங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் தயாரித்தல் .

அமைச்சர் பணிப்புக்கள் வழங்கலாம் என்பது

7. (1) அமைச்சர், காலத்துக்குக்காலம், முகவர் நிலையத்துக்கும் உரிய வேறு அரசாங்க முகவர் நிலையங்களுக்கும், அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறாகத் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல்மீதான தேசியக் கொள்கையினதும் செயல்திட்டத்தினதும் கருமங்கள்மீதான அத்தகைய பணிப்புக்களையும் வழிகாட்டுநெறிகளையும் வழங்கலாம்.

(2) அமைச்சர், காலத்துக்குக்காலம் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல்மீதான தேசியக் கொள்கையையும் செயல் திட்டத்தையும் அரசாங்க, தனியார் துறைகளினுள் செயற்படுத்துவதற்கு இயைபானதாகவிருக்கும் அளவுவரை, செயற்படுத்துகை முறை, மாதிரி மற்றும் அளவு என்பன தொடர்பான அத்தகைய பணிப்புக்களையும் வழிகாட்டுநெறிகளையும் செயலணிக்கு வழங்கலாம்.

(3) அத்தகைய பணிப்புக்களுக்கும் வழிகாட்டுநெறிகளுக்கும் இணங்கியொழுகுதல், செயலணியினதும், முகவர் நிலையத்தினதும், இயைபான அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள், நியதிச் சட்டமுறையான குழுக்கள், நிறுவனங்கள் மற்றும் அரசாங்க, தனியார்துறையின் ஏனைய முகவர் நிலையங்கள் என்பவற்றினதும் கடமையாதல் வேண்டும்.

வரிக்கொடுப்பனவு என்பவற்றிலிருந்து முகவர் நிலையமானது விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

8. (1) முகவர் நிலையமானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளின்படி அனுமதிக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய அளவுக்கு, முகவர் நிலையத்தின் வருமானத்தின்மீதான அல்லது இலாபங்களின்மீதான ஏதேனும் வரிக்கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) அமைச்சரானவர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், முகவர் நிலையத்துக்கு நன்கொடையளிக்கப்படும் அல்லது முகவர் நிலையத்தினால் அதன் நிதிகளிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் அல்லது கொள்வனவுசெய்யப்படும் எவையேனும் பண்டங்களின்மீது, அத்தகைய எவையேனும் பண்டங்களின் நன்கொடை அல்லது இறக்குமதி அல்லது கொள்வனவு, முகவர் நிலையத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கு உகந்ததாகவுள்ளதெனக் கொள்ளப்படின், ஏதேனும் சுங்கத் தீர்வையை அல்லது உற்பத்தித்தீர்வையைக் கொடுப்பனவு செய்வதிலிருந்து முகவர் நிலையத்துக்கு விலக்களிக்கலாம்.

(3) அளிக்கப்படும் சேவைகளுக்காக அல்லது முகவர் நிலையத்தின் பொதுவான ஆதாரத்துக்கான உதவுதொகையாக முகவர் நிலையத்துக்குக் கொடுப்பனவொன்றைச் செய்கின்ற எவரேனுமாள், வருமான வரிக்கான பொறுப்பைக் கணிப்பிடும் நோக்கத்துக்காக, அத்தகைய கொடுப்பனவு உண்மையில் எந்த ஆண்டில் செய்யப்படுகின்றதோ அந்த ஆண்டிலான வருமானத்திலிருந்தான கழிப்பனவொன்றாக அத்தகைய கொடுப்பனவுத் தொகையை உரிமைகோரலாம்.

9. (1) இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகவும், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது அதிகாரமளிக்கப்படுகின்ற ஏதேனும் கருமம் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் :—

(அ) தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் மீதான தேசியக் கொள்கையின் கட்டுக்கோப்பினுள், அத்தகைய கொள்கையைச் செயற்படுத்துவதற்காக, பல்வேறு துறைகளுக்காக அவசியமானவையாக இருக்குமளவுக்கு ஒழுக்கக்கோவைகள் ;

(ஆ) தேசியக் கொள்கையின் நியதிகளின்படி வகுத்தமைக்கப்படவேண்டிய ஏதேனும் செயல்திட்டத்தின் வடிவமும் உள்ளடக்கமும் ;

(இ) மனித மூலவளங்கள் அபிவிருத்தி, உற்பத்திகள், சேவைகள், சந்தைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன, தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல்துறைக்கு அவை ஏற்புடையன வாகுவதில், அவற்றுக்கான சர்வதேசப் பிரசித்தி பெற்ற தரங்கள் ; அத்துடன்

(ஈ) குழுவின் பணிகள்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதியொவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அது அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

நீக்கம்.

10. (1) தகவல் தொழினுட்பத்துக்கான பேரவையைத் (த.தொ.பே.) தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்த 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான, தொழினுட்பவியல் அபிவிருத்திச் சட்டத்தின் III ஆம் பாகம் இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றது.

(2) தகவல் தொழினுட்பத்துக்கான பேரவையினால் (த.தொ.பே.) சொந்தமாக வைத்திருக்கப்பட்ட எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனமும், அத்தகைய பேரவையின் சகல சொத்துக்களும் பொறுப்புக்களும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து, இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் நியதிகளின்படி நிறைவேற்று முகவர் நிலையமாகவுள்ள இலங்கைத் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் முகவர் நிலையத்துக்குக் கைமாற்றப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(3) அத்தகைய நீக்கம் எவ்வாறிருப்பினுஞ்சரி, 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான, தொழில் நுட்பவியல் அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறான பேரவையின் பணிகள் தொடர்பாக கொண்டுநடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் எல்லாக் கருமங்களையும், அத்தகைய கருமங்கள் பூர்த்திசெய்யப்படும் வரையில் பேரவையானது கொண்டுநடாத்தலாம் என்பதுடன் முடிவுறுத்தலாம்.

11. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.